மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 02 ம் நாள்

**இடைநிலை மனு எண். 330/2024-ல்**

**அசல் வழக்கு எண். 122/2015**

1. பாலகிருஷ்ணன்.
2. தமிழ்செல்வன்.
3. சார்பதிவாளர், மன்னார்குடி.
4. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், திருவாரூர்.

.... மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

**// எதிர்//**

சுப்பிரமணியன். .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 ன்படி தாக்கல் செய்து, தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள வழக்கை மீண்டும் திறந்து (Reopen) செய்ய அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் தீர்ப்புரைக்காக எதிர்வரும் 28.08.2024 ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிப்பதற்காக கடந்த 24.04.2024 ம் தேதியில் வாய்தா போடப்பட்டு அன்றைய தினத்தில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிக்க முடியாமல் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் ஓய்வில் இருந்து வந்ததால் மனுதாரரது வழக்கறிஞரை சந்தித்து விபரம் தெரிவித்து மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சியம் அளித்து மனுதாரரை விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது.

மேற்படி வழக்கில் மனுதாரரது தரப்பு வாதுரை செய்வதற்கு மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளித்து மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வது அவசியமாக உள்ளது. எனவே மேற்படி வழக்கை மீண்டும் திறந்து (Reopen) மனுதாரரை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய அனுமதிக்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் :-</u>**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது நிலைநிற்கத் தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப் படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

கடந்த 24.04.2024 ம் தேதி முதல் எதிர்வாதி தரப்பு சாட்சியத்திற்காக பலமுறை கேட்பு தேதி போடப்பட்டும், கால அவகாசம் கொடுக்கப்பட்டும் 1 மற்றும் 2 எதிர்வாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியும் விசாரணை செய்யவில்லை. மேற்படி எதிர்வாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகவும் இல்லை.

கடந்த 03.06.2024 ம் தேதி வாதி தரப்பில் வாதுரை செய்யப்பட்டு, பிற்பாடு, தீர்ப்புக்காக வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. மீண்டும் காலதாமதத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், வாதிக்கு இந்த வழக்கில் நீதியும், நியாயமும் கிடைத்துவிடக்கூடாது என்பதற்காகவும் கெட்ட எண்ணத்தில் 1 வது, 2 வது எதிர்வாதிகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1 வது, 2 வது எதிர்வாதிகள் தரப்பில் சாட்சி விசாரணை செய்யப்படவில்லை. மேற்படி D.W.1 சாட்சியை மறுவிசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த வகையில் சரியானது என்பது விந்தையாக உள்ளது. எனவே மனுவை அனுமதிப்பது சட்டப்படி சரியானது இல்லை. நீதியின் நலனுக்கு உகந்ததும் இல்லை. எனவே மனுதாரர்கள்

மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5. <u>தீர்வு:-</u>

1. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, மற்றும் வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3. மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பு விசாரணை முடிவடைந்து, பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக கடந்த 22.03.2024 முதல் 24.04.2024 வரை வாய்தாக்கள் கொடுக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படாததால் இந்நீதிமன்றத்தால் பிரதிவாதி தரப்பு விசாரணை 24.04.2024 ம் தேதி அன்று முடிக்கப்பட்டுள்ளது. தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் தரப்பில் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள ஆட்சேபனணகள் ஆகியவை நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படாத நிலையில் வழக்கை மீண்டும் திறந்து, D.W.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்யும்படி மனு தாக்கல் செய்திருப்பது தவறானது என எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது, மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக 24.04.2024 ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர்/பிரதிவாதி ஆஜராகாத நிலையில், அவர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரை விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாகவும் கூறி, பின்னர் இறுதியில் D.W.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய அனுமதி அளிக்கும்படி கூறியிருப்பதை கருத்தில் கொண்டு சிறிய பிழை ஏற்பட்டுள்ளதாக என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.** மேலும், இவ்வழக்கானது 2015 முதல் நிலுவையில் இருப்பதை கவனத்தில் கொண்டும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதால், நீதியின் நலன் கருதி நிபந்தனையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6. முடிவில்,** மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ (ரூபாய் ஆயிரம் மட்டும்) வரும் 23.09.2024 ம் தேதிக்குள் நேரடியாக செலுத்தி வைக்க வேண்டும் என்றும் தவறும் பட்சம் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மேலும், மனுதாரர்/பிரதிவாதி இம்மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிய விசாரணை காலதாமதமின்றி முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 23.09.2024.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (18.09.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.23 18:28:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி .

<u>**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**</u>

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.23 18:28:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி .